# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விவாகப் பதிவு (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2006, நவெம்பர் மாதம் 10 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 4.75** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விவாகப் பதிவு (திருத்தச்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 60/200
4638

## 112 ஆம் அத்தியாயமான விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, விவாகப் பதிவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*112 ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவை திருத்துதல்.*

**2.** 112 ஆம் அத்தியாயமான விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2) ஆளொருவர் —

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராகவரின் ;

(ஆ) மாகாண சபையின் உறுப்பினரொருவரின் ; அல்லது

(இ) உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகவரின் ; அல்லது

(ஈ) குடியரசின்கீழ் பணக்கொடுப்பனவுடன் கூடிய பதவியொன்றைத் தாங்குகின்றாராயின் ; அல்லது

(உ) பதிவாளர் பதவியொன்றை வகிப்பவரின் கடமைகளைப் பாதிக்கக்கூடிய உயர் தொழில் ஒன்றில் ஈடுபடின்,

அவர் பதிவாளர் ஒருவராக நியமிக்கப்படுவதினின்றும் அல்லது தொடர்ந்திருப்பதினின்றும் தகைமை இழந்தவராதல் வேண்டும்.

(3) எவரேனும் பதிவாளர் (2) ஆம் உட்பிரிவின் பயனைக் கொண்டு அவ்வாறு தொடர்ந்திருப்பதினின்றும் தகைமை இழந்தவராகவருமிடத்து, பதிவாளர் தலைமையதிபதி, அமைச்சரின் அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய பதிவாளரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அகற்றுதலானது, கட்டளையில் குறித்துரைக்கப்படும் தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் பதவிதுறத்தலின் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலின் விளைவாக பதிவாளர் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், இப்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறு ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்